**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>Case No. C.C. No.217/2020</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-1, L.W- 1 |
| Name | : Iyyappan | Defence | : |
| Father Name | : Panjavarnam | Court | : |
| Village | :Periya Street, Kodaikaramullai | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : /2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 26.08.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 04.06.2019-ம்தேதி இரவு 8.30 மணிக்கு நான் எனது வீட்டிற்கு பக்கத்தில் போட்டிருந்த வைக்கோலை மாடுகள் மேய்ந்ததால் அதை விரட்டிக்கொண்டு என் வீட்டின் வழியாக வயல் பக்கம் சென்றேன். பின்பு மாடுகளை ஓட்டிவிட்டு திரும்ப வீட்டீற்கு வந்தபோது எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள குளத்தின் அருகே உள்ள வயல் அருகே வந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் யார் எனது கொல்லை வழியாக மாடுகளை விரட்டி சென்றது என்று கேட்டு 1-வது எதிரி எனது முகத்தில் டார்ச் லைட்டை அடித்தார். நான் அதற்கு நான் தான் ஓட்டி சென்றேன் என்று சொன்னேன். அதற்கு 1-வது எதிரி என்னை குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக திட்டி 1-வது எதிரி அவரது மகனான 2-வது எதிரியிடம் அவனை அடிடா என்று கூறினார். உடனே 2-வது எதிரி இரும்பு கம்பியால் எனது வலது பக்க கையில் அடித்தார். **சாட்சி நீதிமன்றத்தில் தனது வலது கையில் பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டதையும் காயத்தழும்பையும் காட்டினார்.** நான் என்னை தற்காத்துக்கொள்ள தடுத்தபோது ராஜேந்திரன் என் தலையில் கம்பியால் வலது பக்க தலையில் அடித்தார். அதில் எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டேன். அதன் பிறகு நான் சத்தம் போடவே ஊரில் உள்ளவர்கள் வந்து

சண்டையை விலக்கி விட்டார்கள். காயம்பட்ட என்னை சாட்சி கண்ணதாசனும், பிரகாஷ் என்பவரும் இருச்சக்கர வாகனத்தில் என்னை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு மருத்துவகிசிச்சைக்காக அழைத்து சென்றார்கள். மேற்படி மருத்துவமனையில் நான் 25.06.2019 ம் தேதி வரை சிகிச்சையில் இருந்தேன். மேற்படி மருத்துவமனையில்தான் எனது தலை மற்றும் வலது கையில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளித்தார்கள். நான் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்று எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் அதில் கையெழுத்து செய்தேன். நான் சொல்லப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரித்தாரகள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.